# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




**மன்னா – 12 ஏப்ரல் 2022 பிரதி – 1**



# ஆயர் மடல்



அன்பான திருச்சபையின் இறைமக்களுக்கு உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மார்ச் மாதம் முழுவதும் ஆண்டவர் நம் அனைவரையும் பாதுகாத்தார் நன்றி சொல்லுவோம். தவக்காலத் தில் பிரவேசித்த நாம் நமது ஆவிக்குரிய வாழ்வை சீர்தூக்கிப் பார்க்கவும் ஆண்டவரோடு உள்ள உறவை வலுப்படுத்த ஜெபம், உபவாசம், தியானம் உதவியது. உலகை மீட்க தன்னையே பலியாக கொடுத்த அருள்நாதர் இயேசுகிறிஸ்து தாம் சொன்னபடி மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார். அவரது உயிர்த்தெழுதல் பண்டிகையை ஆசரிக்கிற நாம் உலகிற்கு சாட்சியாக வாழ அழைக்கப்படுகிறோம் என்பதை உணர்ந்துகொள்வோம். தவக்கால சுயஒறுப்பு உண்டியல் காணிக்கை, உயிர்த்தெழுதல் திருநாள் சிறப்பு காணிக்கை படைக்கவும் உற்சாகமாக காணிக்கை படைத்து இறைப்பணியை தாங்கிவருகிற உங்கள் அனைவருக்கும் நன்றி.

நம் பாலைவன மன்னா மாத இதழ் 2011-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் நமது கைகளில் தவழ்கிறது. பதினொன்று ஆண்டுகள் நிறைவுபெற்று பன்னிரெண்டாவது ஆண்டிற்குள் பயணிக்கிறது. இந்த இதழில் வாழ்த்துரை எழுதிய பேராயர்கள், ஆயர்மடல் மற்றும் அருளுரை எழுதிய முன்னாள் ஆயர்கள், தங்கள் சிந்தனை படைப்புகளை படைத்தவர்கள், கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள், கிளைசங்க அறிக்கை எழுதியவர்கள், வெளியிடுவதற்கு உதவியாய் இருந்து செயல்பட்ட முன்னாள் ஆயர்கள் மற்றும் செயற்குழு அங்கத்தினர்கள், இந்நாள் செயற்குழு அங்கத்தினர்கள், அச்சுப்பணியினை திறம்பட செய்தவர்கள், நன்கொடை கொடுத்தவர்கள், ஜெபித்து ஊக்கமளிக்கும் சபைமக்கள் அனைவரையும் பாராட்டி நன்றி சொல்லுகிறேன். தொடர்ந்து இந்த இதழ் வாசிப்போரின் சிந்தனையை தூண்டட்டும்.

அனைத்து ஆராதனைகளிலும் குடும்பமாய் உற்சாகமாய் பங்குகொள்ளவும், புதியவர்களை அழைத்துவரவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். புதிதாக வந்தவர்களையும் வரவேற்று வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சபையின் வளர்ச்சிக்காகவும், உலக சமாதானத்திற்காகவும், ரஷ்யா உக்ரைன் இடையே அமைதி ஏற்படவும் பொருளாதாரத்தில் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் இலங்கை தேசத்திற்காகவும் ஜெபிப்போம்.


மே மாத பாலைவன மன்னா கருப்பொருள் **“உயிர்த்தெழுந்த இயேசுவில் விசுவாசம்”** (யோவான் 20:29) என்னும் கருப்பொருளில் உங்கள் படைப்புகளை படைக்கவும். ஆண்டவரின் அருளாசி நம் அனைவரோடும் இருப்பதாக.

**அன்புடன் போதகர்,**
**Rev. S. போவாஸ்**

## ஆயர் அருளுரை

## சாவின் கொடுக்கு முறிந்தது

**(மத்தேயு 20:1-9)**



பல நிகழ்வுகள் வரலாற்றில் பிறந்திருக்கின்றன. ஆனால் ஒரு சில நிகழ்வுகளால் வரலாறே பிறந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிகழ்வுதான் உயிர்ப்பு.

இயேசுவின் உயிர்ப்பு யூதர்களும், சீடர்களும் எதிர்பார்க்காத ஒன்று. பல முறை உயிர்ப்பை பற்றி சொல்லியும் மறந்துபோனார்கள். இந்த ஆலயத்தை இடித்துவிடுங்கள் மூன்று நாளில் கட்டுவேன் என்றார் (யோவான் 2:19). ஆண்டவரின் உயிர்ப்பு புதுவாழ்வையும், புதுநம்பிக்கையையும் தருகிறது. நற்செய்தியானது கிறிஸ்துவின் உயிர்ப்பை விளக்குகிறது என்பதை விட கிறிஸ்துவின் உயிர்ப்புதான் நற்செய்தியாக விளக்கமளிக்கிறது எனலாம். புதைக்கப்படுவதோ வலுவற்றது, உயிர்த்தெழுவதோ வலுவானது என்பதை உயிர்த்த இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். மனிதகுலமே இருளின் சக்தியிலிருந்தும், சாவின் சக்தியிலிருந்தும் உயிர்த்துவிட்டது என்பதே பொருளாகும். உயிர்த்தெழுதலின் மூலம் எவைகளிலிருந்து வெற்றி என சிந்திப்போம்.

### 1. பாவத்திலிருந்து வெற்றி:-

இயேசு பாவத்தை வென்றார். அவரது உயிர்ப்பு பாவத்திருந்து நம்மை விடுவிக்கிறது. கல்வாரி பலியே பாவ பரிகாரபலிதான். கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே, மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே இருந்த உறவுக்கான தடை அவர்களை உடைத்தெறிந்த பலி. இயேசு கிறிஸ்து பலரின் பாவங்களை போக்கும் பொருட்டு ஒரே முறை தம்மைதாமே பலியாக கொடுத்தார். இயேசுவின் உயிர்ப்பு நடந்து முடிந்த ஒன்று அல்ல இன்றும் என்றும் நடந்து கொண்டிருக்கும் ஒன்று என **மார்ட்டின் லுத்தர்** சொன்னார்.

இளவேனிற்காலத்தில் தளிர்விடும் ஒவ்வொரு இலையிலும் இயேசுவின் உயிர்ப்பு நிகழ்கிறது. இயேசு உயிர்த்தார் நாமும் உயிர்ப்போம். நாம் பாவத்துக்கு இறக்கும்பொருட்டு அவர் நமக்காக இறந்தார். நாம் புதிய வாழ்வுக்கு உயிர்க்கும் பொருட்டு அவர் நமக்காக உயிர்த்தார். உயிர்த்தெழுதலின் மூலம் பாவத்திலிருந்து வெற்றி.

## 2. சாவிலிருந்து வெற்றி:-

இயேசு நாதரின் உயிர்ப்பு சாவின் தூக்கத்திலிருந்து நம்மை எழுப்புகிறது. பாவத்துக்கு கிடைக்கும் கூலி சாவு. மாறாக ஆண்டவர் கொடுக்கும் அருட்கொடை நாம் அவரோடு இணைந்து வாழும் நிலை வாழ்வு.

மரணம் கடைசி பகைவன், அதுவும் அழிக்கப்படும் 1கொரிந்தியர் 15:25,26. இயேசு நாதரின் உயிர்ப்பு சாத்தானின் மாயையிலிருந்து நம்மை விடுவிக்கிறது. எபிரெயர் 2:9, 14,15. பாவத்தின் மீதும் அதன் விளைவான நோவு, சாவின் மீதும் கொண்ட வெற்றி. ஆனால் இது இயேசுவோடு மட்டும் முடிந்தவிட்ட ஒன்று எனில் அது வெறும் வரலாற்று நிகழ்வாகவே இருக்கும். மாறாக நமது ஆண்டவர் இயேசுவில் பெற்ற வெற்றியை நாம் ஒவ்வொருவர் வாழ்விலும் காணவேண்டுமென்று விரும்புகிறார். சாவின் கொடுக்கை முறித்து விட்டார். சாவு வீழ்ந்தது 2கொரிந்தியர் 15:55 என்ற பவுலடிகளாரின் வார்த்தைகள் எவ்வளவு ஆழமானவைகள். மரணம் ஓர் அழிவு அல்ல, முடிவு அல்ல, வெறுமையல்ல இன்னொரு வாழ்வின் தொடக்கம்.


சிறந்த கிறிஸ்தவரும் அறிவியல் அறிஞருமான “மைக்கேல் பாரடே” மரண படுக்கையில் இருந்தார். சாவுக்குப் பிறகு கிடைக்கும் வாழ்வு எப்படியிருக்கும்? என்று கேட்டபோது அவர் சொன்னார் ‘எனக்குத் தெரியாது’ ஆனால் நான் நிலையானவற்றில் நம்பிக்கை கொண்டுள்ளேன். காரணம் நான் நம்பும் மீட்பர் உயிர்த்து இன்றும் வாழ்கின்றார். எனவே நான் வாழ்வேன் என்பது உறுதி. உயிர்ப்பு என்பது மேலோட்டமாக பார்த்தால் புரியாத புதிராக அறிவுக்குப் புலப்படாததாகத் தோன்றும். ஆழமான நம்பிக்கை கொண்டு பார்த்தால் இம்மறைபொருள் காட்டும் மேன்மையை உணரமுடியும் என்றார்.

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் இறப்பு நிச்சயம் உண்டு. ஆனால் இயேசுவோ மரணத்தை வென்று, வெற்றி வீரராய் உயிர்த்தெழுந்தார். மரணம் இயேசுவை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை. அதனால்தான் அவர் வல்லமையோடு உயிர்த்தெழுந்தார். இவ்வாறு அவர் மரணத்தை வென்ற மாவீரர், மானிடகுலம் மீட்ட இறைமைந்தர் என்பதை உணர்ந்து நாம் வாழ்வோம். ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. S. போவாஸ்**

# விலையேறப்பெற்ற முத்து



முத்து வியாபாரி ஒருவர் உலகமெல்லாம் சுற்றி விலையேறப்பெற்ற பெரிய முத்துக்களை சேகரித்து வந்தார். முத்துக் குளிப்பவர் ஒருவர் மிகப்பெரிய முத்து ஒன்று வைத்திருப்பதாக கேள்விப்பட்டார். அதை எப்படியாவது தனக்கு சொந்தமாக்கிக்கொள்ள விரும்பினார். அவர் அந்த மனிதனை சந்தித்து தான் என்ன விலை வேண்டுமானாலும் கொடுப்பதாகவும், அந்த முத்தை தனக்கு கொடுத்துவிடும்படியாகவும் கேட்டார். அந்த முத்துக்குளிப்பவர் துக்கத்தோடு புன்முறுவல் பூத்தார். உங்களால் அதற்கு கிரயம் செலுத்தமுடியாது என்றார். உங்களுக்கு கட்டாயம் வேண்டுமானால் அதை இலவசமாக வேண்டுமானால் கொடுக்கலாம் என்றார்.

அது எப்படி முடியும் விலையை செலுத்தாமல் அதை உங்களிடமிருந்து பெற்றுக்கொள்வது நியாயமல்ல. நான் அதின் விலையைக் கொடுப்பேன் என்றார். அப்போது அந்த முத்துக்குளிப்பவர், ஏன் அந்த முத்திற்கு விலை செலுத்தமுடியாது என்று விளக்கலானார்.

என் மகன் முத்துக்குளிப்பவன். இந்த பெரிய விலையேறப்பெற்ற முத்தை அவன் எடுத்த நாளில் அவன் கடலின் மிக ஆழத்திற்கு சென்று அதை எடுத்தான். அவன் நீர்மட்டத்திற்கு வந்தபோது தண்ணீர் அழுத்தம் நீங்கியதால் அவன் மயக்கமடைந்து உடனே மரித்துபோனான். என் மகனின் உயிர் கிரயத்தினால் எடுக்கப்பட்டதுதான் இந்த முத்து. இதற்கு நீங்கள் என்ன விலை கொடுப்பீர்கள்? முத்து வியாபாரி இலவச ஈவாக அவர் கையிலிருந்து அந்த முத்தை பெற்றுக்கொண்டு கண்ணீரோடு நன்றி செலுத்தினார். இரட்சிப்பு ஆண்டவரின் இலவச ஈவு. இயேசு கிறிஸ்து சிலுவையில் தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்து நம்மை மீட்டிருக்கிறார். இன்றும் அவர் உயிரோடு இருக்கிறார். ஆண்டவரின் இந்த இலவச ஈவை நாம் நன்றியோடு பெற்றுக்கொள்ள அவர் கேட்கிறார். நாம் ஆயத்தமா!

**அன்புடன் போதகர்**

## மகளிர் பகுதி

## "மகதலேனா மரியாள்"

### (யோவான் 20:1-18)



திருமறையில் 7 மரியாளைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. அதில் இயேசு நாதரின் தாயார் மரியாளுக்கு அடுத்ததாக அதிகம் பேசப்பட்டவள் மகதலேனா மரியாள். திருமறையில் இவளைக் குறித்து 12 முறை சொல்லப்பட்டுள்ளது. இவள் மகதலேனா என்னும் ஊரை சார்ந்தவள். இவ்வூர் கலிலேயா கடற்கரையின் அருகாமையிலுள்ளது. இவள் ஒரு யூதப்பெண்மணி. அவள் எவ்வாறு செயல்பட்டாள் என்பதைக் குறித்து சிந்திப்போம்.

### 1. அறிந்துகொண்டாள்:-

மகதலேனா மரியாளைக் குறித்து லூக்கா 8:2-ல்தான் முதலாவது சொல்லப்பட்டுள்ளது. அவள் 7 பிசாசுகள் பிடித்து இருந்தவள், இயேசு நாதரால் அதிலிருந்து விடுதலை பெற்றவள். அதன்பின் அவரின் இறைப்பணியில் பங்குகொண்டாள். இயேசு நாதர் அற்புதம் செய்பவர் என்பதை அறிந்துகொண்டிருந்தாள். இயேசுவை சிலுவையில் அறைந்தபோது யோவானைத் தவிர மற்ற ஆண் சீடர்கள் ஓடினார்கள். ஆனால் மரியாள் இறுதிவரை நின்றாள். உலகில் வாழ்ந்தபோது இயேசுநாதர் தனது உயிர்ப்பின் செய்தியை சொன்னார். ஆனால் மரியாளும் சீடர்களும் அதனை நினைவுகூரவில்லை. கல்லறையின் அருகில் சென்ற மரியாள் உடல் இல்லாததால் அழுது கொண்டு நின்றாள். ஆண்டவர் அவளண்டை தோன்றி காட்சி கொடுத்தபோதும் அறியாதிருந்தவள், அவளை பெயர் சொல்லி மரியாளே என அழைத்தபோது அவள் ஆண்டவர் என்பதை அறிந்துகொண்டாள்.

### 2. அனுப்பப்பட்டாள்:-

உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவை கண்டவள் அகமகிழ்ந்தாள். இந்த செய்தியை எல்லோருக்கும் சொல்ல அனுப்பப்பட்டாள். உயிர் உள்ளோர் மத்தியில் உயிருடன் இருக்கும் ஆண்டவரை கல்லறையில் தேடினதால் அவரை காணவில்லை. இதோ சதாகாலங்களிலும் உங்களோடு இருக்கிறேன் என்றவர் நமக்குள்ளே வாசம் செய்கிறார். அவர் நம்மையும் நற்செய்தி சொல்ல அனுப்புகிறார் என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

## 3. அறிவித்தவள்:-

மரியாள் உயிர்ப்பின் செய்தியை மற்றவர்களுக்கு முதன்முதலாக அறிவித்தாள். நம்பிக்கையோடு செயல்பட்டவள், உயிர்த்த இயேசுவை கண்டபோது அதனை அடக்கிவைத்து கொள்ளாமல் திருதூதுவர்களுக்கு திருதூதுரைத்தவள். ஆண்டவர் இன்று நம்மையும் அழைக்கிறார். அவரின் நற்செய்தியை மற்றவர்களுக்கு சொல்ல நாம் ஆயத்தமாவோமா!

உயிர்த்தெழுந்த ஆண்டவர் அதற்கான ஆற்றலை தந்து பெலப்படுத்துவார். ஆமென்!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி. M. R. பெக்ஸிலின் போவாஸ்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள் ~ பண்டித ராமாபாய்

## அடைக்கலம் கொடுங்கள்



**மண்ணில்** : 24.04.1852
**விண்ணில்** : 05.04.1922
**ஊர்** : கங்கமுலா, மகாராஷ்டிரா
**நாடு** : இந்தியா
**தரிசன பூமி** : இந்தியா

முக்தி மிஷன், ஆதரவற்ற பெண்களின் அடைக்கலப்பட்டணம். இது திக்கற்ற பெண்களின் உறைவிடம். தேவதாசிகளின் தெய்வீக நிலையம்.

இந்திய நாட்டின் வரலாற்றில் சுமார் 150 வருடங்களுக்கு முன் குழந்தைத் திருமணம் நடைமுறையிலிருந்தது. இளம் வயதில் கணவர் மரித்துவிட்டால் மனைவி தீயில் எரித்துக் கொல்லப்படும் துயரச் சம்பவம் நிகழ்ந்து கொண்டிருந்தது. பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. தாழ்ந்த குல சாதியினர் மிகவும் இழிவுப்படுத்தப்பட்டனர்.

இந்நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஆண்டவர் ஓர் விடுதலைப் போராட்ட வீராங்கனையைத் தேர்ந்தெடுத்தார். அவர்தான் பண்டித ராமாபாய்.

இளம் வயதிலேயே பல இன்னல்களை வாழ்வில் அனுபவித்திருந்தாலும், அவைகளைப் பொருட்படுத்தாது சமூகத் தீமைகளை வேருடன் அகற்ற தன்னை அர்ப்பணித்தார்.

பூனாவில் **“சாரதா சதன்”** என்ற அமைப்பை ஏற்படுத்தி, ஒதுக்கப்பட்ட இந்திய விதவைகளுக்கும், அனாதை பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கொடுத்தார். அப்பெண்களுக்கு கைத்தொழில்களை கற்றுக்கொடுத்தார். தேவதாசி

முறைகளை அகற்ற பாடுபட்டார். இதனால் இந்து பூசாரிகள் ராமாபாயின் விரோதிகளாக மாறினர். சமுதாயக் கொடுமைகளுக்கு எதிராக பல நூல்களை எழுதினார்.

வாழ்வில் சறுக்கி விழுந்த பெண்களுக்கு அடைக்கலம் கொடுத்த இந்தியப்பெண் இவர். இந்தியாவிலேயே முதன்முதலாக பாலர் பள்ளியையும் ஆரம்பித்தார். கண்ணொளி இழந்தவர்களுக்கு 'பிரெய்லி எழுத்து' முறையைக் கற்றுக்கொடுத்தார்.

பண்டித ராமாபாய் ஜெபத்தையே தனது சக்தி நிலையமாகக் கொண்டிருந்தார். மராட்டிய மொழியில் வேதாகமத்தைத் தந்து, ஆயிரமாயிரம் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றினார். அடைக்கலமற்றோரின் அன்னையான ரமாபாய் ஏப்ரல் 5, 1922-ல் நிலையான அடைக்கலத்தில் பிரவேசித்தார்.

அன்பரே! கிறிஸ்துவின் அன்பினால் மாபெரும் பணிகளைச் செய்ய ஆயத்தமா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** என்னைப் பயன்படுத்தியவர், உன்னையும் பயன்படுத்த வல்லவர் - பண்டித ராமாபாய்

**குயவனின் கரங்களில்:** ஆண்டவரே! என்னைத் தேடி வரும் அனைவருக்கும் அடைக்கலம் கொடுத்து உந்தன் பிள்ளையாக மாற்ற உதவியருளும்.

**தியானத்திற்கு** : எண். 20-21, நீதி. 16, எபேசியர் 1-2

## வரவேற்கிறோம்!

கடந்த மாதங்களில் நமது சபை ஐக்கியத்தில் புதிய அங்கத்தினர்களாக இணைந்த உங்களை கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் வரவேற்கிறோம்.

| Name | Native Place | Area |
|---|---|---|
| Mr. R. B. Jebin Raja & Family | Enayamthoppu | Wattayah |
| Mr. S. Shabu | Devadhanapuram | Ruwi |
| Mr. Belson | Nagercoil | Barka |

## எண்கள் ~ தொடர்

### எண் எட்டு:-

1) கடவுள் உலகை படைத்தார். அதனை ஆளுகை செய்ய மனுக்குலத்தை படைத்தார். மனுக்குலம் பாவம் செய்தபோது எச்சரிப்பின் செய்தி சொல்லப்பட்டது. அதனை ஏற்றுக்கொள்ளவில்லை இதனால் கடவுள் கோபம் கொண்டு தண்ணீரினால் உலகை அழித்தார். நோவாவின் குடும்பம் மட்டும் காப்பாற்றப்பட்டது. ஆக **நோவாவின் பேழையில் பிரவேசித்து மீட்கப்பட்டவர்கள் 8 பேர் மட்டும்**, 1. நோவா, 2. நோவாவின் மனைவி, 3. நோவாவின் பிள்ளைகள் மூன்றுபேர் சேம், காம், யாப்பேத், இவர்களின் மனைவி மூன்றுபேர் மொத்தம் எட்டுபேர். ஆதியாகமம் 7:13, 1பேதுரு 3:20, 2பேதுரு 2:5

2) **ஈசாயின் குமாரர் 8 பேர்** (1 சாமுவேல் 16:10-12). இஸ்ரவேலின் இரண்டாவது அரசர் தாவிது அவரின் உடன்பிறந்த சகோதரர்கள் 7 பேர் மொத்தம் எட்டு பேர்.

3) மில்க்காள் நாகோருக்கு பெற்ற பிள்ளைகள் 8 ஆண் பிள்ளைகள். ஆதியாகமம் 22:21-23. 1. ஊத்ஸ், 2. பூஸ், 3. கேமுவேல், 4. கேசேத், 5. ஆசோ, 6. பில்தாஸ், 7. இத்லாப், 8. பெத்துவெல் என்பவர்கள்.

எட்டாவது எண் இவைகளை கற்றுத்தருகிறது.

(தொடரும்)

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் Mr. Kingsly Paul அவர்களின் தகப்பனார் **Mr. Paul** அவர்கள் மார்ச் மாதம் 5-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள்.

தங்கள் தகப்பனாரை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

# பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – மார்ச் 2022




இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் திருச்சபையின் அனைவருக்கும் பாலைவன மன்னா வாசகர்களுக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தரின் பெரிதான கிருபையினால் மார்ச் மாத பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை மார்ச் மாதம் 17-ம் தேதி CSI Malayam hall-ல் வைத்து நடைபெற்றது. போதகர் அம்மா திருமதி. பெக்ஸிலின் போவாஸ் அவர்கள் ஆரம்ப ஜெபம் ஏறெடுத்தார்கள். அதனைத் தொடர்ந்து துதி ஸ்தோத்திரப் பாடல்கள் பாடப்பட்டது.

கர்த்தருடைய வார்த்தையை போதகர் அம்மா திருமதி. பெக்ஸிலின் போவாஸ் அவர்கள் பகிர்ந்தளித்தார்கள். வேதபாடமாக ரூத் 1:1-14 வாசிக்கப்பட்டு **"நித்தியத்தை இழந்த ஓர்பாள்"** என்ற தலைப்பில் இறைவார்த்தையை அளித்தார்கள். ஓர்பாள் தவறான தீர்மானம் எடுத்து நித்தியத்தை இழந்ததுபோல நாம் இராமல் ரூத்தைப் போன்று நல்ல தீர்மானங்களை நம் வாழ்வில் ஆண்டவரிடம் ஆலோசனை பெற்று எடுக்கவேண்டும் என்று விவரித்து கூறினார்கள். செய்தி வந்திருந்த யாவருக்கும் பிரயோஜனமாக இருந்தது. செய்தியை பகிர்ந்தளித்த போதகர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்.

பின்னர் ஜெபவேளையை திருமதி. கிரேஸ்லின் ராணி பென்சாம் அவர்கள் வழிநடத்தினார்கள். கொடுக்கப்பட்ட ஜெபக்குறிப்புகளுக்காக சங்கத்தினர் பாரத்தோடு திருச்சபைக்காக, மிஷனெரிகளுக்காக, குடும்பங்களுக்காக, ஓமான் மற்றும் இந்திய தேசங்களுக்காக மேலும் உலக நாடுகளின் சமாதானத்துக்காகவும் ஜெபங்களை ஏறெடுத்தார்கள்.

பின்னர் சில சகோதரிகள் கர்த்தருடைய நாம மகிமைக்காக தேவன் தங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை சாட்சியாக அறிவித்தார்கள். அவர்களின் சாட்சி அனைவரின் விசுவாசத்தை பெலப்படுத்துவதாக அமைந்தது. இந்த மாத பெண்கள் ஐக்கிய சங்க கூடுகையை தாங்கினவர்கள் திருமதி. வனிதா ராணி பிரின்ஸ், திருமதி. வெர்ஜின் ஜெகதா ஜினோ. கர்த்தர் தாமே அவர்கள் குடும்பத்தினை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

நிறைவாக சாட்சி சொன்னவர்களுக்காகவும். கூடுகையை தாங்கினவர்களுக்காகவும் மற்றும் வந்திருந்த அனைவருக்காகவும் திருமதி. ஜெயராணி விக்டர் அவர்கள் ஜெபித்து, கூடுகை இனிதே நிறைவு பெற்றது. வருகிற மாதங்களில் நமது திருச்சபையின் அனைத்துப் பெண்களும்

பெண்கள் ஐக்கிய சங்க கூடுகையில் பங்குபெற்று இறைஆசி பெறுமாறு அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

**இவண்**

**பெண்கள் ஐக்கிய செயலர்**
**திருமதி. சாரா ராஜாசிங்**

**பின்குறிப்பு:-** இந்த வருட பெண்கள் ஐக்கிய சங்க ஆண்டு தேர்வு வருகிற அக்டோபர் மாதம் நடைபெறும்.

**தேர்வு பகுதி:-** லூக்கா எழுதின சுவிசேஷம் முழுவதும்.

## ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – மார்ச் 2022




பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் ஆண்கள் சங்கத்தின் சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மார்ச் மாதத்திற்கான ஆண்கள் சங்க கூடுகை ஆண்டவருடைய சுத்த கிருபையால் 17-03-2022 அன்று போதகர் அருள்திரு. போவாஸ் அவர்கள் தலைமையில் இரவு 9 மணிக்கு ஜெபத்துடன் ஆரம்பமானது. அதில் ஆவிக்குரிய பாடல்கள் பாடப்பட்டு நன்றி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

பின்பு யோவான் 4:1-9 வரை வேதபாடம் வாசிக்கப்பட்டது. அதன்பின் **"தாகம்"** என்ற தலைப்பில் ஆண்கள் சங்க செயலர் செய்தியை வழங்கினார்கள். அதில் ஆண்டவருக்கும் மனிதனுக்கும் உள்ள தாகத்தைக் குறித்து விளக்கினார்கள். லூக்கா 8:43,44 ஆசீர்வாதங்களை மனிதன் ஆண்டவரிடத்திலிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளும்போது ஆண்டவரைத் தேட மறந்துவிடுகிறான். வியாதி, துன்பம் சோதனை வரும்போது ஆண்டவரைத் தேட தாகமுடையவனாய் இருக்கிறான். இவ்விதமாகத்தான் பெரும்பாடுள்ள ஸ்திரீ தன் ஆஸ்திகளை எல்லாம் விற்று வைத்தியனுக்குக் கொடுத்தாள். எல்லாம் இழந்தபோது ஆண்டவரைத் தேட தாகமுண்டாயிற்று.

லூக்கா 19:4,5 சகேயுவினுடைய வாழ்க்கையிலும் ஆண்டவர் அவனை சந்தித்தபோது அவனுடைய பணத்தாகம் நீங்கிற்று. அநியாயமாக வாங்கினது உண்டானால் நாலத்தனையாக திருப்பிக்கொடுப்பதாக ஒப்புக்கொடுத்தார். ஆண்டவரை சந்தித்தபோது சகேயுவின் தாகம் தணிந்தது.

ஆண்டவரின் தாகம் (யோவான் 4:8,9) அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி தாகத்துக்கு தண்ணீர் தா என்றார். ஆனால் சமாரியா நாட்டாளாகிய ஸ்திரீ தண்ணீர் கொடுக்க மறுக்கிறாள். ஏனென்றால் சமாரியா ஸ்திரீ தாழ்த்தப்பட்ட ஜாதி, ஆண்டவர் உயர்ந்த ஜாதி. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஏற்றத்தாழ்வுகளை போக்க யாக்கோபின் கிணற்றண்டையில் தாகமாய் இருந்தார். நாமும் தாகமுடையவர்களாய் இருக்க ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

தொடர்ந்து சாட்சிகள் சொன்னவர்களுக்காக ஜெபிக்கப்பட்டது. ஜெபக்குறிப்புகளுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டு 10 மணியளவில் போதகர் ஜெபத்துடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது. கூடுகை அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது.

இந்த நாளுக்குரிய பங்கைக்கொடுத்து ஆண்டவரை மகிமைப்படுத்துகிறவர்கள் Mr. Bejo Nelson & Mr. Bensam இவர்களுக்கு ஆண்கள் சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருகின்ற மாதத்திலும் ஆலயத்தில் உள்ள ஆண்கள் அனைவரும் இந்த கூடுகையில் கலந்துகொண்டு ஆண்டவரின் நாமத்தை மகிமைப்படுத்துவோம். கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார். ஆமென்!

**இவண்,**
**ஆண்கள் சங்க செயலர்,**
**திரு. M. சைலஸ்**

## மீட்பளிக்கும் மீட்பர்



“நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷனுக்கு அடிமைகளாகாதிருங்கள்”.

“அடிமை” என்றவுடன் நினைவுக்கு வருவது “சிறை”. மனிதரைச் சிறைப்படுத்தின சில கெட்ட பழக்கவழக்கங்களில் இருந்து அவர்களை மீட்க “சிறைச் சாலை” உருவாக்கப்பட்டது.

களவு, வழிப்பறி போன்ற குற்றங்கள் சிலரை சிறைப்படுத்தி இருந்தன. அவைகளிலிருந்து அவர்களை மீட்க சிறையினை ஏற்படுத்தி, 1550-ல் இங்கிலாந்தில் சிறைக்கு பெயரை House of Correction என்று சூட்டினார்கள். அதாவது தங்களை திருத்திக் கொள்ளும் இல்லம் என்று பொருள்.

மனிதன் எதிலே எப்படி அடிமையாக வேண்டுமென்ற வரையறையை பவுல் ரோமர் 13:8-ல் அன்பிற்கு அடிமையாகுங்கள் எனத்தருகிறார். உலகில் வாழும்

நாம், மக்களுடைய கோட்பாடுகளுக்கும், கொள்கைகளுக்கும், மக்களுக்கும், அதிகாரங்களுக்கும் அடிமையாகி இவர்கள் மூலமும் இவற்றின் மூலமும், மீட்பு கிடைக்கும் என்று நம்புகின்றோம்.

நம்மை திருத்துகிற **"அன்புக்கு"** அடிமையாவோம். அதை தவிர்த்து தீயவைகளை செய்ய நம்மைத் தூண்டுகிற நயவஞ்சகங்களுக்கு அடிமைகளாகாதிருப்போம். நம்மைச் சிறைப்படுத்துகிற தீயவைகளை, சிறையாக்க பரமனிடம் நம்மைச் சமர்ப்பிப்போம்.

**"சிறைபடுத்தினவற்றை சிறையாக்கி விட்ட அதிதீரமுள்ள எங்கள் உபகார வள்ளலே இயேசுவே கிருபாசனபதியே கெட்ட இழிஞன் எனை மீட்டருள்"** என்ற பாடலின் பொருளை அனுபவமாக்குவோம். இறைவன் சிலுவையில் சிந்திய தம் உதிரத்தால் நம்மை கிரயத்திற்குக் கொண்டார். எனவே நாமும் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் மீட்பைப் பெற நாடுவோமாக.

**- வே.கி. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.

3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
4. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.
5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு மத சார்பின்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.
2. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.
3. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.
4. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.
2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.
3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.
4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.
5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

## உலக நாடுகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. உலக நாடுகளின் சமாதானத்திற்காக குறிப்பாக ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு இடையே நடக்கும் போர் முடிவுக்கு வரவும், இந்த போரினால் ஏற்பட்ட இழப்புகளிலிருந்து இரு நாடுகளும் மீண்டு வரவும் ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்காக குறிப்பாக இலங்கை தேசத்திற்காக பாரத்தோடு ஜெபிப்போம்.

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ ஏப்ரல் 2022

| | | |
|---|---|---|
| 01-04-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Thamari Johnson |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Augustin Dhayanantha Raj |
| **08-04-2022** | **குருத்தோலை தினம்** | |
| | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Vanitha Rani Prince |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Austin Daniel Raj |
| **14-04-2022** | **வியாகுல வியாழன்** | |
| | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Vency Deepa Kannan |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Bejo Nelson |
| **15-04-2022** | **புனித வெள்ளி** | |
| **17-04-2022** | **உயிர்த்தெழுதல்** | |
| | முதலாம் திருமறைப்பகுதி | Committee member |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Committee member |
| 22-04-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Virgin Jegatha Jino |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Bensam |
| 29-04-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Aspin Mercilent Ethel Bejo |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Berkins M. |
| 06-05-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Binita Pratheesh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Daniel Raj |

## ஏப்ரல் 2022 மாத கேள்விகள்

### (கலாத்தியர் முதல் எபேசியர் முடிய)

1. பிசாசிடம் எதிர்த்து நிற்க எதை தரித்துக்கொள்ளுங்கள் என பவுல் கூறுகிறார்?
2. சந்ததி என குறிப்பிடப்பட்ட அந்த ஒருவர் யார்?
3. இரண்டு ஏற்பாடுகளில் முதல் ஏற்பாடு எது?
4. எது வெளிச்சமாயிருக்கிறது?
5. தூண்களாக எண்ணப்பட்டவர்கள் யார்?
6. தேவனை விசுவாசித்தேன் அது எனக்கு நீதியாக எண்ணப்பட்டது. நான் யார்?
7. தூரமாயிருந்த நீங்கள் எதினாலே சமீபமானீர்கள்?
8. எது மனிதனால் உண்டானதல்ல?
9. எதிலிருந்து நம்மை விடுவிக்க கிறிஸ்து தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்?
10. யார் சீனாய்மலை?
11. அந்நியோந்நியத்தின் அடையாளம் என்ன?
12. சுதந்தரத்தின் அச்சாரமாயிருப்பது யார்?
13. எதை செய்வதற்கு நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்?
14. பவுல் எத்தனை வருடம் கழித்து எருசலேமுக்கு சென்றார்?
15. யார் சபிக்கப்பட்டவன்?
16. எதற்கு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்?
17. பவுல் எதனால் ஊழியக்காரரானார்?
18. யார் பரிசுத்தவான்களில் சிறியவன்?
19. பவுல் எதை செய்தால் பிரயோஜனமாயிருக்காது என்றார்?
20. ஒருவருக்கொருவர் என்ன செய்யவேண்டும்?

## மார்ச் 2022 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் - 2கொரி. 11:9
2. சரீரத்தின் தோற்றம் - 2கொரி. 10:10
3. தேவனுடைய வல்லமையினால் - 2கொரி. 13:4
4. கர்த்தரால் புகழப்படுகிறவன் - 2கொரி. 10:18
5. மூன்றுதரம் - 2கொரி. 12:8
6. நற்சீர் பொருந்தும்படிக்கு – 2கொரி. 13:9
7. ஒளியின் தூதன் - 2கொரி. 11:14
8. கெட்டுப்போகிறவர்களுக்கு – 2கொரி. 4:3
9. அகாயாவிலுள்ளவர்கள் - 2கொரி. 9:2
10. இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை – 2கொரி. 7:10
11. தேவன் - 2கொரி. 5:5
12. பெற்றார்களே – 2கொரி. 12:14
13. லௌகிக துக்கம் - 2கொரி. 7:10
14. 2கொரி. 4:8
15. அரேத்தா ராஜாவினுடைய சேனைத்தலைவன் - 2கொரி. 11:32,33
16. ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை – 2கொரி. 5:19
17. நித்தியமானவைகள் - 2கொரி. 4:18
18. கொரிந்தியரிடம் - 2கொரி. 6:11
19. தீத்து – 2கொரி. 8:16,18
20. நீதியின் விளைச்சலை – 2கொரி. 9:10

## மார்ச் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Percy Jean |
| Mrs. Boopathi Baskar | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Thamari Johnson |
| Mrs. Leela Gladson | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Manju Martin | Mrs. Virgin Jegatha Jino |

## ஏப்ரல் 2022 மாத கேள்விகள்

## (புலம்பல் 1 முதல் எசேக்கியா 5 முடிய)

1. மூன்றில் ஒரு பங்கு எதினால் சாவார்கள்?
2. எதை உங்களுக்கு விரோதமாக அனுப்புவேன் என கர்த்தர் சொல்லுகிறார்?
3. எது ஓடித் திரிகிறது?
4. சிறைப்பட்டவர்கள் எதன் நடுவில் இருந்தார்கள்?
5. உன்னை யாருக்கு காவலாளனாக வைத்தேன் என கர்த்தர் கூறுகிறார்?
6. கையில் இருந்தது எது?
7. எதைக் குறித்து பகைஞர் பரியாசம் பண்ணினார்கள்?
8. தங்கத்துக்கு ஒப்பானவர்கள் யார்?
9. தரையிலே மௌனமாய் இருக்கிறார்கள் - யார்?
10. யாருடைய அக்கிரமத்தை விசாரிப்பார்?
11. எதை தாறுமாறாக்கினார்?
12. நீ காண்கிறதை புசி என கர்த்தர் எதை புசிக்கும்படி எசேக்கியேலிடம் கூறினார்?
13. வடக்கேயிருந்து தோன்றிய ஜீவன்கள் எதன் சாயலாயிருந்தது?
14. கலகக்கார ஜாதி யார்?
15. மிகுதியாய் பாவஞ்செய்தது யார்?
16. பகைக்கிறவர்கள் எதைபோல் வேட்டையாடினார்கள்?
17. யாரை அவமானப்படுத்தினார்கள்?
18. இருதயத்தை ஆண்டவரின் சமூகத்தில் எதைப்போல் ஊற்றிவிடு என கூறினார்?
19. எருசலேமிலே எதைக் முறிக்கிறேன் என கர்த்தர் கூறுகிறார்?
20. இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமத்தை எத்தனை நாள் சுமக்க வேண்டும் என கூறினார்?

## மார்ச் 2022 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. அசரியா, யோகனான், அகங்காரியான எல்லா மனுஷரும் - எரே. 43:2
2. வானராக்கினி – எரேமியா 44:25
3. 832 – எரேமியா 52:29
4. மகா சங்காரம் - எரேமியா 51:54
5. சஞ்சலத்தால் - எரேமியா 45:3
6. பிரவாகத்தை – எரேமியா 46:8
7. பூமியின் எல்லைகளிலிருந்த பலத்த ராஜாக்கள் - எரேமியா 50:41
8. காத்சோரின் குடிகள் - எரேமியா 49:30
9. நிம்ரீம் - எரேமியா 48:34
10. கேமோஷ் - எரேமியா 48:7
11. குதிரைகளுடைய குளம்புகளின் சத்தம் - எரேமியா 47:3
12. வெண்கலத்தூண், ஆலயத்திலிருந்த ஆதாரம், வெண்கல கடல்தொட்டி – எரேமியா 52:17
13. யோகனான் - எரேமியா 43:6
14. பாபிலோன் - எரேமியா 51:8
15. எகிப்து – எரேமியா 44:14
16. எகிப்து – எரேமியா 46:20
17. தீங்கு – எரேமியா 45:5
18. மெரொதாக் - எரேமியா 50:2
19. தமஸ்கு – எரேமியா 49:27
20. எகிப்தின் குமாரத்தியாகிய கன்னிகை – எரேமியா 46:11,12

## மார்ச் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| |
|---|
| Mr. Daniel Raj P. |
| Mr. Jean C. R. Shibin |
| Mr. Jino John |
| Mr. Justus Martin |
| Mr. Ramesh R. |
| Mr. Robin Devadhas |
| Mr. Sujith Gladson |

May God Bless All

## Birthday Celebrants – April 2022

| | |
|---|---|
| 04th April | Mrs. Selva Angel, W/o Mr. Mohan Babu |
| 04th April | Mr. Dhinakaran |
| 05th April | Mrs. M. Latha, W/o Mr. George |
| 05th April | Miss. Ancio Broose, D/o Mr. Jegan Broose |
| 07th April | Mr. T. Raju |
| 08th April | Master. Daulton Ziegan Isaac, S/o Mr. Isaac Solomon |
| 09th April | Mr. P. Bino Vetha Raja Singh |
| 10th April | Mrs. Eunice Beulah Suganthi, W/o Mr. Isaac Solomon |
| 10th April | Mr. M. Ramesh |
| 11th April | Master. Joshua, S/o Mr. T. Raju |
| 11th April | Mrs. Vijayakumari, W/o Mr. Devaraj |
| 11th April | Miss. Anlin Mathney, D/o Mr. Anto Kingston |
| 11th April | Mr. M. Berkins |
| 12th April | Mr. Prem Vijins Gabriel |
| 12th April | Mrs. Reni Thresia, W/o Mr. C. A. Vinu |
| 13th April | Mrs. Sabitha, W/o Mr. Jebastin |
| 13th April | Mr. J. Selvamani |
| 13th April | Master. Jacob Derin, S/o Mr. Nalam Dimalson |
| 14th April | Master. Kevin John, S/o Mr. A. Rajasingh |
| 14th April | Mr. Ashok Rajasekaran |
| 17th April | Mr. Livingston |
| 17th April | Miss. Jolene Arianna, D/o Mr. Joel |
| 18th April | Mr. C.A. Vinu |
| 18th April | Mr. Michael |
| 19th April | Miss. Jeniffer Riya Anu, D/o Mr. Anu |
| 21st April | Master. J.Jake Ryan, S/o Mr. R. B. Jebin Raja |
| 21st April | Mrs. Felsi Rani, W/o Mr. John Jacob |
| 23rd April | Mrs. Gracelin Rani, W/o Mr. Bensam |

| | |
|---|---|
| 23rd April | Mrs. Paulin Shabila, W/o Mr. Gnanadhas |
| 26th April | Mr. R. Sunil |
| 26th April | Master A. Garisht Ruhan S/o Atheesh Joy |
| 27th April | Miss. Arifny Cratford Jenkin, D/o Mr. Jenkin Raj |
| 30th April | Mrs. Shakina, W/o Mr. Prem Vijins |

## Wedding day Anniversaries – April 2022

| | |
|---|---|
| 02nd April | Mr. Broosewelt & Mrs. Nisha |
| 03rd April | Mr. Jose Chandra Bose & Mrs. Jeya Selvi |
| 06th April | Mr. C. Stalin & Mrs. Sheeba |
| 06th April | Mr. C.A. Vinu & Mrs. Reni Thresia |
| 13th April | Mr. Mohan Babu & Mrs. Selva Angel |
| 22nd April | Mr. J. Gnanadhas & Mrs. Paulin Shabila |

## அனுதின மன்னா – ஏப்ரல் 2022

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| **ஏப்ரல் 1** | **வெள்ளி** | **லூக்கா 22:1-20** | **லூக்கா 22:19** | **2சாமு. 12-15** |
| ஏப்ரல் 2 | சனி | 1கொரி. 15:1-22 | 1கொரி. 15:3 | 2சாமு. 16-18 |
| ஏப்ரல் 3 | ஞாயிறு | ரோமர் 13:1-14 | ரோமர் 13:8 | 2சாமு. 19:20 |
| ஏப்ரல் 4 | திங்கள் | யோவான் 15:1-14 | யோவான் 15:14 | 2சாமு. 21-22 |
| ஏப்ரல் 5 | செவ்வாய் | தீத்து 3:1-8 | தீத்து 3:5 | 2சாமு. 23-24 |
| ஏப்ரல் 6 | புதன் | ரோமர் 12:1-18 | ரோமர் 12:12 | 1இரா. 1-2 |
| ஏப்ரல் 7 | வியாழன் | 2கொரி. 4:6-18 | 2கொரி. 4:8 | 1இரா. 3-5 |
| **ஏப்ரல் 8** | **வெள்ளி** | **2கொரி. 5:1-17** | **2கொரி. 5:17** | **1இரா. 6-7** |
| ஏப்ரல் 9 | சனி | 1பேதுரு 1:5-17 | 1பேதுரு 1:15 | 1இரா. 8-9 |
| ஏப்ரல் 10 | ஞாயிறு | ஏசாயா 61:1-7 | ஏசாயா 61:7 | 1இரா. 10-12 |
| ஏப்ரல் 11 | திங்கள் | மத்தேயு 18:1-11 | மத்தேயு 18:3 | 1இரா. 13-15 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 12 | செவ்வாய் | அப். 15:1-11 | அப். 15:11 | 1இரா. 16-18 |
| ஏப்ரல் 13 | புதன் | எசேக். 36:16-36 | எசேக். 36:30 | 1இரா. 19-20 |
| ஏப்ரல் 14 | வியாழன் | சகரியா 9:9-17 | சகரியா 9:12 | 1இரா. 21-22 |
| **ஏப்ரல் 15** | **வெள்ளி** | **லூக்கா 5:1-10** | **லூக்கா 5:6** | **2இரா. 1-3** |
| ஏப்ரல் 16 | சனி | மாற்கு 11:15-26 | மாற்கு 11:25 | 2இரா. 4:5 |
| ஏப்ரல் 17 | ஞாயிறு | யோவான் 2:1-10 | யோவான் 2:5 | 2இரா. 6:8 |
| ஏப்ரல் 18 | திங்கள் | மாற்கு 14:1-9 | மாற்கு 14:6 | 2இரா. 9:11 |
| ஏப்ரல் 19 | செவ்வாய் | மாற்கு 12:10-17 | மாற்கு 12:10 | 2இரா. 12:14 |
| ஏப்ரல் 20 | புதன் | 1கொரி. 1:18-31 | 1கொரி. 1:18 | 2இரா. 15:17 |
| ஏப்ரல் 21 | வியாழன் | மத்தேயு 13:1-11 | மத்தேயு 13:8 | 2இரா. 18:20 |
| **ஏப்ரல் 22** | **வெள்ளி** | **ஓசியா 14:1-9** | **ஓசியா 14:5** | **2இரா. 21-23** |
| ஏப்ரல் 23 | சனி | 1பேதுரு 2:1-10 | 1பேதுரு 2:3 | 2இரா. 24-25 |
| ஏப்ரல் 24 | ஞாயிறு | யோவான் 3:1-16 | யோவான் 3:16 | 1நாளா. 1-2 |
| ஏப்ரல் 25 | திங்கள் | எபேசி. 4:1-13 | எபேசி. 4:2,3 | 1நாளா. 3:5 |
| ஏப்ரல் 26 | செவ்வாய் | சங்கீதம் 51:1-12 | சங்கீதம் 51:10 | 1நாளா. 6:7 |
| ஏப்ரல் 27 | புதன் | சங்கீதம் 73:1-20 | சங்கீதம் 73:1 | 1நாளா. 8:10 |
| ஏப்ரல் 28 | வியாழன் | ஏசாயா 43:1-12 | ஏசாயா 43:2 | 1நாளா. 11-13 |
| **ஏப்ரல் 29** | **வெள்ளி** | **ரோமர் 6:1-13** | **ரோமர் 6:13** | **1நாளா. 14-16** |
| ஏப்ரல் 30 | சனி | ஏசாயா 6:8-13 | ஏசாயா 6:8 | 1நாளா. 17-20 |
| மே 1 | ஞாயிறு | சங்கீதம் 119:1-8 | சங்கீதம் 119:1 | 1நாளா. 21-23 |
| மே 2 | திங்கள் | ஆமோஸ் 9:8-15 | ஆமோஸ் 9:14 | 1நாளா. 24-26 |
| மே 3 | செவ்வாய் | உபா. 30:1-10 | உபா. 30:9 | 1நாளா. 27-29 |
| மே 4 | புதன் | சங்கீதம் 81:1-16 | சங்கீதம் 81:16 | 2நாளா. 1-4 |
| மே 5 | வியாழன் | எரேமியா 7:1-7 | எரேமியா 7:7 | 2நாளா. 5-7 |
| **மே 6** | **வெள்ளி** | **சங்கீதம் 138:1-8** | **சங்கீதம் 138:3** | **2நாளா. 8-11** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. S. Bovas**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : pastor@csitamilchurchoman.org**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**